ஜூலை–2023–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay Authorization for the month of July2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.9256/பக7(1)/2023 – 1, நாள் 28.07.2023

அனுப்புநர்
திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35
முதன்மைச் செயலர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்
சார் சம்பளக் கணக்கு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 03.

ஐயா,

பொருள் பள்ளிக்கல்வி – மேல்நிலைக் கல்வி– தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) 100 தற்காலிக பணியிடங்கள் மற்றும் 193 தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை) தற்காலிக பணியிடங்கள் ஆக மொத்தம் 293 தற்காலிக பணியிடங்கள் – ஜூலை –2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்கக் கோருதல் தொடர்பாக.

பார்வை
1 அரசாணை (நிலை) எண்.129 பள்ளிக் கல்வித் துறை நாள்.18.05.1999.
2 அரசாணை (நிலை) எண்.63 பள்ளிக் கல்வித்(விஇ) துறை நாள்.13.03.2007.
3 அரசாணை(நிலை)எண்.143 பள்ளிக் கல்வித்(விஇ) துறை நாள்.02.07.2008.
4 அரசாணை (1டி) எண்.86. பள்ளிக் கல்வித்(ப.க.7(1)) துறை நாள்.01.04.2022.
5 பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.000504/எல்/இ3/2022, நாள்.11.01.2023.
6 பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.00504/எல்/இ3/2022, நாள்.13.07.2023.

---------

பார்வை 1 முதல் 3 வரையுள்ள அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட 300 தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை) பணியிடங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள 7 பணியிடங்கள்

போக மீதமுள்ள 293 பணியிடங்களுக்கு மட்டும் பார்வை 4-இல் கண்ட அரசாணையின்படி 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 293 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2023 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்க பார்வை 5இல் காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் அரசை கோரியிருந்தார். துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் 01.01.2023 முதல் 31.03.2023 வரை 3 மாதங்களுக்கு மேற்காண் 293 தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை) பணியிடங்களுக்கு சம்பள அளிப்பு அதிகார ஆணை (Expresss Pay Order) வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து தற்போது ஜூலை 2023-ஆம் மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குமாறு பார்வை 6-இல் கண்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர்அரசைக் கோரியுள்ளார்.

2. இந்நேர்வில் 293 தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை) பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவானது, அரசாணை (டி) எண். 271, நிதி (சிஎம்பிசி) துறை, நாள். 18.08.2022-ன்படி அமைக்கப்பட்ட குழுவின் முன் 09.03.2023 அன்று வைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், அரசாணை வெளியிட காலதாமதம் ஆகும் என்பதால், இணைப்பு I மற்றும் IIல் காணும் 293 தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை) பணியிடங்களுக்கு ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (PayAuthorization) வழங்கப்படுகிறது. மேற்கண்ட பணியிடங்களுக்கான ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக்கொண்டு ஊதியம்பெற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

ந.க.எண்: 00504/அ2/இ3/22 நாள்: 28.07.23